**செய்தி வெளியீடு எண்:597** **நாள்:17.12.2016**

# செய்தி வெளியீடு

சுற்றுலாத்துறை மற்றும் இந்திய சுற்றுச்சூழல் சுற்றுலாக்குழுமம் இணைந்து, சென்னையில், ஃபோலி அமேதிஸ்ட் என்ற இடத்தில் (Folly at the Amethyst, Chennai) – சத்தியம் திரையரங்கின் வாகன நிறுத்துமிடம் அருகில்) **சுற்றுலா குறித்த பயிற்சிப்பட்டறை,** வருகின்ற 22.12.2016 அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சிறப்பாக நடைபெற உள்ளது.

இப்பயிற்சிப்பட்டறை, சுற்றுலாத் தொழில் ஈடுபட்டுள்ளவர்களை தரம் உயர்த்துவதோடு அல்லாது, உள்ளூர் மக்களை ஊக்குவிப்பதாகவும், சுற்றுச்சூழலை வளர்ப்பதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சிப்பட்டறை கீழ்க்கண்ட தலைப்புகளில் நடைபெறவுள்ளது.

1. அகில உலக அளவிலான சிறந்த பயிற்சி முறை
2. இயற்கை மற்றும் பாரம்பரிய கலாச்சாரத்தை பேணுதல்
3. சுற்றுலா மேம்பாடு மற்றும் பாதுகாப்பை சமன் செய்தல்
4. சுற்றுச்சூழல் சுற்றுலா சான்றளிப்பின் அவசியம்
5. விருந்தோம்பல் தொழிலில் சீரான நடைமுறைகள் சந்தைப்படுத்துதல்

மேலும், இப்பயிற்சிப்பட்டறை, சுற்றுலாத்துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சுற்றுலா தொழில் புரிவோர், விடுதியாளர்கள், பயண ஏற்பாட்டாளர்கள், அரசு சாரா சுற்றுலா நிறுவனங்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் நடைபெறவுள்ளது.

எனவே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ள இப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்பயிற்சிப்பட்டறை குறித்த விபரங்களுக்கு முனைவர் அர்ஜுனா திரா – (கைபேசி +91 9811031980, நிகரி arjunadhira@ecotourismsocietyofindia.org) அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**